
RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025



# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 250 | செப்டம்பர்.11 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## செப்.22 முதல் அக்.1ம் தேதி வரை ஆளுநர் மாளிகையில் நவராத்திரி கொலு: பொதுமக்கள் பார்வையிடலாம்



சென்னை: செப்.11-

கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் 'நவராத்திரி கொலு செப்டம்பர் 22 முதல் அக்டோபர் 1ம் தேதிவரை நடைபெற உள்ளது. இந்த கொலு கொண்டாட்டத்தை ஆளுநர் ஆர்.என்.ரவி தொடங்கி வைக்கிறார்.

தினமும் மாலை 4 முதல் 5 மணிவரை நடைபெறும் வழிபாடு நிகழ்ச்சியிலும் மாலை 5 முதல் 6 மணி வரை நடைபெறும் கலாச்சார நிகழ்ச்சிகளிலும் தனிநபர்கள், பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பார்வையாளர்களாக கலந்து கொள்ளலாம்.

ஆர்வமுள்ள தனிநபர்கள், பொதுமக்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் https://tnrajbhavantour.tn.gov.in/navaratri/ என்ற இணையதள இணைப்பை பயன்படுத்தி செப். 20ம் தேதிக்குள் பதிவு செய்ய வேண்டும். பதிவில், தங்கள் பெயர், வயது, பாலினம், முகவரி, கைப்பேசி எண், மின்னஞ்சல் முகவரி, பார்வையிட வரும் தேதி உள்ளிட்ட விவரங்கள் இருக்க வேண்டும்.

'முதலில் வருவோருக்கு முன்னுரிமை' என்ற அடிப்படையில் தினமும் அதிகபட்சம் 200 பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அவர்களுக்கான ஒதுக்கப்பட்டுள்ள தேதியையும், நேரத்தையும் உறுதிப்படுத்தும் மின்னஞ்சல் அனுப்பப்படும்.

பார்வையாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்துக்கு குறைந்தது 30 நிமிடங்களுக்கு முன்னதாக, ஆளுநர் மாளிகை இரண்டாம் (2) நுழைவாயில் வழியாக வந்தடைய வேண்டும். தங்களுக்கு அனுப்பப்பட்ட உறுதிப்படுத்திய மின்னஞ்சலின் நகல் மற்றும் அசல் புகைப்பட அடையாளச் சான்றை கொண்டு வர வேண்டும்.

ஆர்வமுள்ள வெளிநாட்டினரும் 'நவராத்திரி கொலு 2025' கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளலாம் அவர்களின் அசல் பாஸ்போர்ட் மட்டுமே அடையாளச் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படும். ஆளுநர் மாளிகை நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# சமூக நீதிக்கு அடையாளமாக திமுக உள்ளது: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்

காஞ்சிபுரம்: செப்.11-

'சமூக நீதிக்கு அடையாளமாக திமுக உள்ளது' என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்தார். பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று காஞ்சிபுரம் வந்தார். முதலில் காஞ்சிபுரம் சட்டப்பேரவைத் தொகுதி ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றார்.

வரும் சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்வது குறித்தும், வாக்குச் சாவடி முகவர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்தும் அவர் ஆலோசனை நடத்தினார். சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக வெற்றி பெறுவதற்கான பல்வேறு வழிமுறைகளை கூறியதுடன், கட்சி நிர்வாகிகளின் கருத்துகளையும் கேட்டறிந்தார்.இதனைத் தொடர்ந்து, அரசு சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா



நடைபெற்றது.

இந்த விழாவில் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

மகளிர் முகத்தில் மகிழ்ச்சி: காஞ்சிபுரம் மாவட்டத்தில் இந்த நிகழ்ச்சியில் 5 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த விழாவுக்கு 90 சதவீதம் மகளிர் வந்துள்ளனர். அவர்களின் முகங்களில் மகிழ்ச்சி தெரிகிறது. இதுதான் திராவிட மாடல் அரசின் வெற்றி. ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு அடையாளம் இருக்கும்.

பாஜகவுக்கு அடக்குமுறை அடையாளம். அதிமுகவுக்கு அடிமைத்தனம் அடையாளம். ஆனால், நமது திமுகவுக்கு சமூக நீதிதான் அடையாளம். முதலமைச்சர் பொறுப்பேற்றதும் அவர் முதல் கையெழுத்தாக மகளிர் விடியல் பயணத்துக்கு கையெழுத்திட்டார். அதன் பின்னர், மகளிர் உதவித் தொகை வழங்க உத்தரவிட்டார். விடுபட்ட மகளிர் தற்போது 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில் மனுஅளித்து வருகின்றனர். அவர்களுக்கும் அந்த உதவித் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பள்ளிகளில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் காலை உணவுத் திட்டம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இந்தத் திட்டத்தை பஞ்சாப் முதலமைச்சர் பாராட்டியதுடன் இதனை பஞ்சாபில் அமல்படுத்த உள்ளதாக தெரிவித்தார். வீட்டுமனைப் பட்டா என்பது பலருடைய கனவு. மக்கள் பட்டா கேட்டு காத்திருக்கும் நிலை மாறி, அரசே உங்களைத் தேடி வந்து பட்டா கொடுக்கிறது. இன்று முதல் நீங்கள் குடியிருக்கும் இடம் உங்களுக்கு சொந்தமானது. அந்த நிம்மதியுடன் இருக்கலாம்.

வெளிநாட்டு முதலீடு: முதல்வர் வெளிநாடு சென்று ரூ.15 ஆயிரம் கோடி முதலீடுகளை ஈர்த்துள்ளார். முதல்வரின் பல்வேறு முயற்சிகளால் தமிழ்நாடு சிறப்பான இடத்தை பெற்றுள்ளது. அரசு உங்களுக்கு துணையாக இருப்பதுபோல் நீங்கள் அரசுக்கு துணையாக இருக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். இந்நிகழ்ச்சியில், 4,997 பேருக்கு ரூ.215 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். பல்வேறு புதிய கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டியதுடன், பணி முடிந்த கட்டிடங்களை திறந்தும் வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், வேளாண்மைத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, மாவட்டச் செயலர்க.சுந்தர், காஞ்சிபுரம் சட்டப்பேரவை உறுப்பினர் சிவிஎம்பி. எழிலரசன், மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் எம்.மகாலட்சுமி, தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அ.யுவராஜ், காஞ்சிபுரம் மாநகரச் செயலர் சி.கே.வி.தமிழ்செல்வன் உள்பட பலர் பங்கேற்றனர்.

## "வர்த்தக தடைகளை தகர்க்க உங்களுடன் பேச விரும்புகிறேன்" ட்ரம்ப் அழைப்பு; மோடி சொன்னது என்ன?

புதுடெல்லி, செப்.11-

இந்தியாவுடன் மீண்டும் வர்த்தகப் பேச்சுவார்த்தை தொடர்வதாகவும், பிரதமர் மோடியுடன் பேசுவதை ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளதாகவும் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார். அதற்கு பிரதமர் நரேந்திர மோடியும் இசைவு தெரிவித்துள்ளார்.

உலகளவில் அமெரிக்காவின் வர்த்தக கட்டமைப்பை மறுசீரமைக்கும் வகையில், பல்வேறு நாடுகள் மீது அதிபர் டொனால்டு ட்ரம்ப் கடந்த சில மாதங்களாக கடுமையான வரிகளை விதித்து வருகிறார்.



இந்த நிலையில், இந்தியப் பொருட்களுக்கு ஏற்கெனவே 25 சதவீத வரி விதித்த ட்ரம்ப், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை காரணம் காட்டி, கூடுதலாக 25 சதவீதம் வரியை விதித்து, இந்தியாவுக்கான வரியை 50 சதவீதமாக உயர்த்தினார். இதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. ட்ரம்ப்பின் வரிவிதிப்பு நடவடிக்கையால், இந்தியாவில் தொழில் துறை கடும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளது.

இந்நிலையில், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தனது சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "இந்தியா அமெரிக்கா இடையேயான வர்த்தகத் தடைகளை நீக்குவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி கொள்கிறேன். வரும் வாரங்களில் எனது நல்ல நண்பரான மோடியுடன் பேசுவதை நான் எதிர்நோக்கியுள்ளேன். இரு பெரிய நாடுகளுக்கும் வர்த்தக பேச்சுவார்த்தையில் தீர்வு எட்டப்படுவதில் எவ்வித சிக்கலும் இருக்காது என்று நான் உறுதியாக நம்புகிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இதற்கு பதிலளித் துள்ள பிரதமர் நரேந்திர மோடி, "இந்தியாவும் அமெரிக்காவும் நெருங்கிய நட்பு நாடுகள். இயல்பான கூட்டாளிகள். நமது வர்த்தகப் பேச்சுவார்த்தை நம் இரு நாடுகளுக்கும் இடையேயான எல்லையற்ற திறன்களை கண்டெடுப்பதற்கு மிகுந்த உதவியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். அதிபர் ட்ரம்ப்புடன் பேசுவதை நானும் எதிர்நோக்கியுள்ளேன். இரு நாட்டு மக்களுக்கும் வளமான, பிரகாசமான எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்க நாம் உழைப்போம்." என்று பதிவிட்டுள்ளார். இருநாட்டுத் தலைவ ர்களும் வர்த்தக தடை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த முன்வந்துள்ளது நல்ல முன்னேற்றமாகப் பார்க்கப்படுகிறது.





## வேலூர் மாநகராட்சி, காட்பாடி, அருப்புமேடு 12வது வார்டில், தமிழக அரசின் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

### அமைச்சர் துரைமுருகன் பங்கேற்பு

வேலூர், செப்.11

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, வேலூர் மாநகராட்சி, மண்டலம் 2, அருப்புமேடு, கனிஅமுது தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற தமிழக அரசின் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பார்வையிட்டு, மனுதாரர்கள் விண்ணப்பித்து வழங்கிய, தகுதியுடைய பயனாளிகளுக்கு வகுப்பு சான்றிதழ், வீட்டு மனை பட்டா வழங்குதல், மின்சார துறை சார்ந்த வீட்டு மின் இணைப்பு பெயர் மாற்றம் ஆணை, வருமான சான்று உள்ளிட்ட சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வின்போது வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் மா.சுனில்குமார், 1வது மண்டலக்குழுத் தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, உதயநிதி ஸ்டாலின் வெல்பர் அசோசியேஷன் ஒருங்கிணைந்த மாவட்டத் தலைவரும், 12வது வார்டு மாமன்ற உறுப்பினருமான டீட்டா. சரவணன், வட்டாட்சியர் ஜெகதீசன், துணை ஆணையார் புவனேஸ்வரன், சுகாதார அலுவலர் சிவகுமார், அரசு துறைகள் சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், 12வது வட்ட திமுக பொறுப்பாளர் கே.பி.ஆர்.ராஜுபாய், 6 வார்டு வட்ட செயலாளர் சம்பந்தம், 11 வார்டு வட்ட திமுக செயலாளர் ரஜினி, 13 வது வார்டு வட்ட திமுக செயலாளர் சரண்யா, 8 வார்டு வட்ட திமுக செயலாளர் சசிகுமார், காட்பாடி பகுதி திமுக செயலாளர் ஸ்டீல் ஒர்க் இன்ஜினியர் ரமேஷ் மற்றும் திமுக நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் உட்பட பலர் உடனிருந்தனர். இந்த முகாமில் வருவாய்த்துறை, மாற்றுத்திறனாளி நலத்துறை, குடிநீர் வடிகால் வாரிய துறை, இ சேவை மையம், மருத்துவம் மற்றும் நல வாழ்வு துறை, மின்சாரத்துறை, மகளிர் உரிமை தொகை வழங்கும் துறை, சமூக நலத்துறை, உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டு பொதுமக்களின் மனுக்களை பெற்று இணையதளத்தில் பதிவேற்றம் செய்தனர். பதிவேற்றம் செய்த மனுக்களின் மீது தீர்வு காணும் விதத்தில் தகுதியுடைய மனுதாரர்களுக்கு ஆவண ஆணைகளை வழங்கினர்.

## குமரி பாலம்: கண்ணாடி இருக்குமிடத்தில் சுத்தியலுக்கு என்ன வேலை?

கன்னியாகுமரி, செப்.11-

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலைக்கும் விவேகானந்தர் மண்டபத்திற்கும் இடையே அமைக்கப்பட்டுள்ள கண்ணாடிப் பாலம் சுற்றுலா பயணிகளின் வரவேற்பை பெற்றுள்ள இடமாகும். கடலின் அழகை ரசித்தபடியே கண்ணாடி மீது நடந்து செல்வதை சுற்றுலா பயணிகள் அதிகம் விரும்புகின்றனர்.

இந்த பாலத்தில் விரிசல் விழுந்துள்ளதாக சமீபத்தில் வெளியான செய்தி, சுற்றுலா பயணிகள் மத்தியில் ஒருவித அச்சத்தையும், பாதுகாப்பு குறித்த கேள்விக்குறியையும் ஏற்படுத்தியது. பாலத்தின் கட்டமைப்பு மேற்பகுதியில் பெயின்ட் அடிக்கும் பணி நடந்தபோது, 7 மீட்டர் உயரத்தில் இருந்து சுத்தியல் தவறி விழுந்ததில் 6வது கண்ணாடியில் லேசான விரிசல் விழுந்துவிட்டது என்று



மாவட்ட நிர்வாகம் சார்பில் விளக்கம் அளித்தது பொதுமக்கள் மத்தியில் இன்னும் அதிர்ச்சியை உருவாக்கியது. கண்ணாடி இருக்குமிடத்தில் சுத்தியலுக்கு என்ன வேலை? என்ற கேள்வி அனைவரது மனதிலும் எழுந்துள்ள நியாயமான கேள்வியாகும்.

கண்ணாடியால் உருவாக்கப்பட்டுள்ள கட்டமைப்பின் மேற்பகுதியில் சுத்தியல் பயன்படுத்தியிருப்பது பாதுகாப்பில் ஏற்பட்டுள்ள கவனக் குறைவான செயலாகவே கருத முடியும். கடந்த மாதம் 16ம் தேதி இச்சம்பவம் நடந்த நிலையில், புதிய கண்ணாடிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு அதைப் பொருத்தும் பணிகள் தாமதமாக நடைபெற்று வருவது இன்னும் வருத்தமளிக்கும் விஷயமாகும்.

கண்ணாடிப் பாலம் அமைக்கப்பட்டு இதுவரை 17.50 லட்சம் பேர் இப்பாலத்தில் நடந்து சென்று இயற்கை அழகை ரசித்திருப்பதன் மூலம் சுற்றுலா பயணிகளிடம் உள்ள வரவேற்பை உணர முடியும். கண்ணாடியில் விரிசல் விழுந்த நிலையிலும் இதுவரை ஒரு லட்சம் சுற்றுலா பயணிகள் இதை பயன்படுத்தியுள்ளனர். நான்கு அடுக்கில் அமைந்துள்ள புதிய கண்ணாடியை வரவழைத்து பொருத்துவதில் ஏற்பட்டுள்ள தற்காலிக தடைகளை மாவட்ட ஆட்சியர் அழகுமீனா தெரிவித்துள்ளதுடன், சில தினங்களில் இப்பணி நிறைவடையும் என்று கூறியிருப்பது ஆறுதலளிக்கிறது.

அதே சமயம், கண்ணாடிப் பாலத்தின் பாதுகாப்பில் அலட்சியம் காட்டப்பட்டிருப்பதை கண்டிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் பார்வையிடும் ஒரு கண்ணாடி அமைப்பில் என்னென்ன பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும், என்னென்ன பொருட்களை அனுமதிக்க கூடாது என்பது குறித்த விரிவான பட்டியலை உருவாக்கி, அவற்றை கண்டிப்புடன் அமல்படுத்துவதிலும் மாவட்ட நிர்வாகம் அக்கறை காட்ட வேண்டும்.

சோதனை செய்வதற்கு தேவையான பணியாட்கள், பாதுகாப்பு உபகரணங்களும் போதுமான அளவில் இருக்கும் வகையில் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதும் அவசியம். மக்கள்தொகை அதிகம் உள்ள நாடு என்ற முறையில் எந்நேரமும் சுற்றுலா பயணிகளின் வருகை வழக்கத்திற்கு மாறாக இருக்க வாய்ப்புண்டு.

பயணிகள் தங்களை அறியாமல் ஆபத்தான பொருட்களை எடுத்துவரும் சூழ்நிலையும் ஏற்படும் என்பதால், அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மாவட்ட நிர்வாகம் முன்கூட்டியே திட்டமிட்டு விதிமுறைகளை உருவாக்கினால் மட்டுமே அசம்பாவிதம் ஏற்படாமல் தடுக்க முடியும். தமிழகத்தில் உள்ள சுற்றுலா தலங்கள் பாதுகாப்பு மிக்கவை என்ற நற்பெயரையும் அப்போதுதான் பெற்றுத்தர முடியும்.

செய்தி மற்றும் விளம்பரங்களுக்கு
இணை ஆசிரியர் : க.சந்திரகுமார்
9585323132

# ரியாத்தில் மரணம் அடைந்த சுவாமிநாதன் உடலை தாயகம் அனுப்பி வைத்த இந்தியன்ஸ் வெல்ஃபேர் ஃபோரம் மற்றும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் மனிதநேய மக்கள் கட்சியின் நிர்வாகிகளுக்கு நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்



செங்கல்பட்டு, செப்.11-

செங்கல்பட்டு மாவட்டம் வேல்ந்துருகன் காலனி கீழ்கட்டளையை சேர்ந்த சாமிநாதன் ராஜு என்கின்ற சகோதரர் சவுதி அரேபியா ரியாத்தில் பணிபுரிந்து வந்தார் இவர் கடந்த 09.08. 2025 சனிக்கிழமை அன்று நெஞ்சு வலி ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் அங்கு அவர் சிகிச்சை பலனின்றி மரணம் அடைந்தார் இந்த தகவலை இறந்து போன சாமிநாதன் ராஜு அவர்களின் உறவினர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மூலமாக ரியாத் மண்டல இந்தியன்ஸ் வெல்ஃபேர் ஃபோரம் அமைப்பிற்கு தகவல் தரப்பட்டது. அதன் அடிப்படையில் மண்டல தலைவர் மீமிசல் நூர் முஹம்மத் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க சமூக நலத்துறை செயலாளர் கொடிபள்ளம் சாதிக் பாஷா அவர்களின் முழு முயற்சியில் ரியாத் மண்டல சமூக நலத்துறை துணை செயலாளர் அய்யம்பேட்டை கட்டுவா அஜ்மி ஆகியோர் விரைந்து செயல்பட்டு இந்திய தூதரகம் மற்றும் அவர் பணியாற்றிய நிறுவனத்தின் உதவியுடன் அனைத்து பணிகளையும் முடித்து ரியாத் சர்வதேச விமான நிலையத்திலிருந்து இலங்கை வழியாக சென்னை விமான நிலையத்திற்கு 9.9.2025 செவ்வாய்க்கிழமை அன்று காலை அனுப்பி வைக்கப்பட்டது சென்னை விமான நிலையத்திற்கு சென்றடைந்த சுவாமிநாதன் ராஜு உடலை மனிதநேய மக்கள் கட்சி துணைப் பொதுச் செயலாளர் தாம்பரம் எம்.யாக்கூப் அவர்களின் அறிவுறுத்தலின்படி செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் எஸ்.கே. ஜாகிர் உசேன் அவர்கள் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் மற்றும் மனிதநேய மக்கள் கட்சியின் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் குடும்பத்தினர்கள் சுவாமிநாதன் ராஜு உடலை பெற்று ஆம்புலன்ஸ் மூலமாக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட மருத்துவ சேவை அணி செயலாளர் எஸ்.எஸ். அப்துல் ரகுமான் அவரது சொந்த ஊரான செங்கல்பட்டு மாவட்டம் கீழ்கட்டளையில் இருக்கக்கூடிய அவர்களுடைய இல்லத்தில் கொண்டு போய் சேர்த்தனர் சுவாமிநாதன் ராஜு உடலை பெற்றுக் கொண்ட அவர்களுடைய உறவினர்கள் இறந்த உடலை சவுதி அரேபியா ரியாத்தில் இருந்து எங்கள் வீடு வரை கொண்டு வந்து சேர்த்த இந்தியன்ஸ் வெல்ஃபேர் ஃபோரம் மற்றும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் மனிதநேய மக்கள் கட்சியின் நிர்வாகிகளுக்கு கண்ணீர் மல்க நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள் இப்பணியில் சமூகநலத்துறை துணை செயலாளர் வல்லம் சையத் அலி மற்றும் மண்டல துணைச் செயலாளர் அரசை ஆசிக், இக்பால், சர்தார், அபூபக்கர், பீர் முகமது, முசாபர் ஷேக், உள்ளிட்ட பலரும் துணையாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது



# ஸ்ரீ நாராயண குரு171 வது ஜெயந்தி விழா

கோவை, செப்.11-

கோவை சாய்பாபா காலனி ஸ்ரீ நாராயண குரு பொற்கோவிலில் அமைந்துள்ள ஸ்ரீ நாராயண மிஷன் பிரார்த்தனை கூடத்தில் ஸ்ரீ நாராயண மிஷன் , ஸ்ரீ நாராயண குரு கல்வி அறக்கட்டளை மற்றும் கோயமுத்தூர் ஸ்ரீ நாராயண குரு சாரிட்டபிள் டிரஸ்ட் சார்பாக 171வது ஸ்ரீ நாராயண குரு ஜெயந்தி விழா பிரம்மாண்டமாகவும் கோலாகலமாகவும் கொண்டாடப்பட்டது. குரு ஜெயந்தி விழாவிற்கு தலைவர் கே.வேலாயுதன், பொது செயலாளர் டி.எஸ். ஹரிஷ்குமார் மற்றும் என்.மோகனன் ஆகியோர் தலைமை வகித்தனர்.

ஜெயந்தி விழாவின் முதற் நிகழ்ச்சியாக கொடியேற்று விழாவினை வேலாயுதன் தலைவர் கொடியேற்றி துவங்கி வைத்தார். பின்னர் குரு ஜெயந்தி விழாவினை சிவகிரி மடம் சுவாமி ஞான தீர்த்தா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி நிகழ்ச்சிகளை துவக்கி வைத்தார்.பின்னர் மாபெரும் சமபந்தி அன்ன தானம் டிரஸ்டி சாமி மற்றும் தலைவர் வேலா யுதம் ஆகியோர் துவக்கி வைத் தனர். அன்னதானத்தில் 2000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு உண்டு மகிழ்ந்தனர் அதுமட்டுமின்றி ஆசிரமங்களுக்கும் அன்ன தானம் வழங்க ப்பட்டது குறிப்பி டத்தக்கது. அதனைத்தொடர்ந்து

குரு ஜெயந்தி ஊர்வலம் சென்டை மேலத்துடன் துவங்கியது.

அதனைத்தொடர்ந்து ஜெயந்தி சம்மேளனம் நிகழ்ச்சியில் கேரளா யுவகலா சாகிதியின் மாநில தலைவர் ஆலங்கோடு லீலா கிருஷ்ணன், சிவகிரி மடம் சுவாமி ஞான தீர்த்தா, ஸ்ரீ மதி சஷி சந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றி சிறப்பித்தனர்.மேலும் ஜெயந்தி விழாவை முன்னிட்டு நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள், 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றவர்கள் சிறந்த ஆசிரியர்கள் பள்ளி கல்லூரி முதல்வர்கள் ஆகியோருக்கு பரிசளிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

ஸ்ரீ நாராயண குரு ஜெயந்தி விழாவில் மிஷன் துணை தலைவர்கள் .மணிகண்டன், சஜீஷ்குமார், மற்றும் அறக்கட்டளை நிர்வாகிகள் உறுப்பினர்கள் குடும்ப அங்கத்தினர் ஆசிரியர்கள் மாணவ மாணவியர்கள் அலுவலக பணியாளர்கள் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு ஜெயந்தி விழாவினை சிறப்பித்தனர்.




# தென்காசி மாவட்ட விவசாயிகளுக்கான உயிர்ம வேளாண்மை விழிப்புணர்வு கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்றது

தென்காசி, செப்.11-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் வட்டாரம் அச்சம்பட்டி எஸ்.எஸ். கிராண்ட் மஹாலில் வேளாண்மை உழவர் நலத்துறையில் 20252026 ஆம் ஆண்டு அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான உயிர்ம வேளாண்மை விழிப்புணர்வு கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

விவசாயிகளுக்கான உயிர்ம வேளாண்மை விழிப்புணர்வு கண்காட்சியில் உயிர்ம வேளாண்மை தொழில் நுட்பம் திட்ட விளக்கம் பற்றிய கண்காட்சி அரங்குகள், மண் பரிசோதனை மற்றும் உயிர் உரங்கள், உயிர்ம வேளாண்மை இடுப்பொருள்கள். நுண்ணீர் பாசனம் பற்றிய அரங்குகள், விவசாயிகளின் உற்பத்தி பொருட்கள் மற்றும் மதிப்பு கூட்டுதல் தேனீ வளர்ப்பு, தென்னை ரகங்கள், தென்னை ஒட்டு சேர்ப்பு, வேளாண் உற்பத்தியாளர் நிறுவனம் உற்பத்தி பொருட்கள், உயிர்ம வேளாண்மை தொழில்நுட்பங்கள், அங்கக சான்றளிப்பு நடைமுறைகள் போன்ற பல அரங்குகள் இடம் பெற்றன. மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்கள் பற்றிய அரங்கமும் இடம்பெற்றிருந்தன.

இக்கண்காட்சியில் வேளாண்மை மற்றும் அதன் சகோதரத்துறைகளின் கண்காட்சியும், தங்கப்பழம் வேளாண்மைக் கல்லூரியின் சார்பில் அரங்கமும் அமைக்கப்பட்டிருந்தது. ஊர்மேலழகியான் வேளாண் அறிவியல் மையத் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பங்குபெறும் கருத்தரங்கமும் நடைபெற்றது. சிறப்பாக காட்சி அமைத்த அரங்குகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. தென்காசி மாவட்ட விவசாயிகள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இக்கண்காட்சியில், இணை இயக்குநர் (வேளாண்மை) சே.அமலா, வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம் மற்றும் மத்திய அரசு திட்டம்) பிரபாகரன், வேளாண்மை துணை இயக்குநர் (மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வேளாண்மை) ச.கனகம்மாள், தோட்டக் கலை துணை இயக்குநர் மூ.ஜெசிமா பானு, வேளாண்மை வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை துணை இயக்குநர் வசந்தி, கடையநல்லூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் உதயகுமார் (கடையநல்லூர்), கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் பா.சுப்பம்மாள், மாவட்ட ஊராட்சிகுழு உறுப்பினர் பூங்கொடி, மற்றும் கனிமொழி, வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் ஆர்.சுந்தர்ராஜ், ஊர்மேலழகியான் வேளாண் அறிவியல் மையம் உளவியல் தொழில்நுட்ப வல்லுனர் ஜே.சுகுமார், தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் இளவரசன், பயிர் பாதுகாப்பு தொழில்நுட்ப வல்லுநர் பாலசுப்ரமணியன், வேளாண்மை மற்றும் சகோதரத்துறைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள், விவசாயிகள்ஆகியோர் கலந்து கொண்டனர்.




# காரைக்குடி உதயநிலா சிலம்பம் அகாடமி மாணவிகள் சாதனை

காரைக்குடி, செப்.11-

காரைக்குடி செட்டிநாடு பப்ளிக் பள்ளியில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை சிவகங்கை மாவட்ட அளவிலான சிலம்ப போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகள் S. அமுதினி fight (முதலிடம்) S.தன்யஸ்ரீ fight (முதலிடம்) S.ஹரினி fight (இரண்டாமிடம்) V.ஹன்சிகா fight (மூன்றாமிடம்) முதலிடம் பெற்ற மாணவிகள் மாநில போட்டிக்கு தேர்வு வெற்றி பெற்ற மாணவிகளை தலைமை ஆசான் M. உதயகுமார் ஆசான் M.சிவகுமார் மற்றும் பெற்றோர்கள் பாராட்டினார்.

# மதுரை மாவட்டத்தில், பொது விநியோகத் திட்ட சேவைகள் குறித்த மக்கள் குறைதீர் முகாம்

மதுரை மாவட்டத்தில், பொது விநியோகத் திட்ட சேவைகள் குறித்த மக்கள் குறைதீர் முகாம் வருகின்ற 13.09.2025 அன்று குடிமைப் பொருள் வட்டாட்சியர் மற்றும் வட்ட வழங்கல் அலுவலகங்களில் முற்பகல் 10.00 முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெறவுள்ளது. மேற்படி முகாமில் புதிய குடும்ப அட்டை விண்ணப்பிக்க, குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், பெயர் திருத்தம், முகவரி மாற்றம் / நகல் அட்டை கோருதல் / கைப்பேசி எண்பதிவு / மாற்றம், தனியார் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் மற்றும் சேவை குறைபாடுகள் குறித்து புகார்கள் மற்றும் இதர குறைகள் தொடர்பான மனுக்களை பொதுமக்கள் நேரடியாக முகாம் அலுவலரிடம் வழங்கி தீர்வுகள் பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.



# கே வி குப்பம் அடுத்த சோழமூர் ஊராட்சியில், தமிழக அரசின் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

வேலூர், செப்.11-

வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் தாலுகா, சோழமூர் ஊராட்சியில், தமிழக அரசின் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம், ஊராட்சி மன்ற தலைவர் இளையராஜா, கவுன்சிலர் சசிகுமார் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்த முகாமை ஊராட்சி மன்ற தலைவர் விஜயராணி சுந்தரம் மற்றும் திமுக மத்திய ஒன்றிய ஐ.டி.விங் விவேகானந்தன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இதில் சிறப்பு கண்காணிப்பு மற்றும் பார்வையாளராக வட்டாட்சியர் பலராமன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜன்பாபு, ஒன்றியக் குழு தலைவர் ரவிச்சந்திரன், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு பார்வையிட்டனர். இம்முகாமில் பொது மக்களின் கோரிக்கை மனுக்களை இணையதளத்தில் பதிவேற் றம் செய்து கொண்டனர். பதிவேற்றம் செய்து கொண்ட பொதுமக்களின் கோரிக் கைகளை தீர்வு காணும் விதத்தில் தகுதியுள்ள மனுதாரர்களுக்கு ஆவண ஆணைகளை வழங்கினர். இதில் வருவாய் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வேளாண்மை துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, மின்சாரத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல வாழ்வு துறை உள்ளிட்ட அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



■ சிவகங்கை மாவட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப்பணிகளின் சார்பில் 12 வட்டாரங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் போஷான் டிராக்கர் பணிகள், குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை மற்றும் அங்கன்வாடி மையங்களில் கற்பிக்கப்படும் முன்பருவக்கல்வி, குழந்தைகளின் விவரங்கள் ஆகியன குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தலைமையில், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஆய்வுக் கூட்டம் மேற்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தில், மாவட்ட திட்ட அலுவலர் திருமதி சண்முகப்பிரியா, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

சிவகங்கை, செப்.11-

2025-2026 ஆம் கல்வி ஆண்டிற்கான பத்தாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு விண்ணப்பிக்கவுள்ள நேரடித் தனித் தேர்வர்களும் (முதன் முறையாக அனைத்துப் பாடங்களையும் தேர்வு எழுத இருப்பவர்கள்), ஏற்கனவே 2012க்கு முன்னர் பழைய பாடத்திட்டத்தில் தேர் வெழுதி அறிவியல் பாடத்தில் தோல்வியுற்றவர்களும் வருகின்ற 19.9.2025 (வெள்ளிக்கிழமை) வரை (விடுமுறை நாட்கள் நீங்கலாக) சிவகங்கை, மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) அலுவலகத்தை நேரில் அணுகி, பதிவுக் கட்டணமாக ரூ.125/ ஐ செலுத்தி தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும், அறிவியல் பாட செய்முறை பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தினை www.dge.tn.gov.in. என்ற இணையதள முகவரியின் வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இப்பதிவானது, பயிற்சி வகுப்பிற்கான பதிவு மட்டுமே.

மேலும், சிவகங்கை மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) அலுவலகத்தில் செய்முறைத் தேர்விற்கு விண்ணப்பம் செய்ததற்கான ஒப்புகைச் சீட்டினை பெற்று, பின்னர் இத்துறையால் தனித்தேர்வர்கள் கருத்தியல் தேர்வெழுத விண்ணப்பிக்க அறிவிக்கப்படும் நாட்களில், நேரடித் தனித் தேர்வர்கள் (Direct Private Candidate) செய்முறைத்தேர்வு பதிவு செய்தற்கான ஒப்புகை சீட்டுடனும், ஏற்கனவே தேர்வெழுதி அறிவியல் உட்பட மற்ற பாடங்களில் தோல்வியுற்ற தேர்வர்கள் அறிவியல் செய்முறைத் தேர்விற்கு விண்ணப்பித்த ஒப்புகை சீட்டு மற்றும் முன்பு தேர்வெழுதிய மதிப்பெண் சான்றிதழ்களின் நகல்கள் ஆகியவற்றினை இணைத்து சேவை மையத்திற்கு (Nodal Centre) சென்று Online-ல் பதிவு செய்து கொள்ளலாம்.

அவ்வாறாக, பதிவு செய்த பின்னர் சேவை மையத்தால் வழங்கப்படும் ஒப்புகைச் சீட்டில் உள்ள விண்ணப்ப எண்ணை (Application Number) பயன்படுத்தியே தேர்வுக்கூட அனுமதிச் சீட்டினை (Hall Ticket) பதிவிறக்கம் செய்ய இயலும். தேர்வுக்கூட நுழைவுச் சீட்டு பெற்ற தனித் தேர்வர்கள் மட்டுமே செய்முறைத் தேர்விற்கு அனுமதிக்கப்படுவர்.

மேலும், பத்தாம் வகுப்பு அறிவியல் பாட செய்முறைத் தேர்விற்கு விண்ணப்பிப்பவர்கள் மாவட்டக் கல்வி அலுவலரால் (இடைநிலை) ஒதுக்கீடு செய்யப்படும் பள்ளிகளுக்குச் சென்று, செய்முறைப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளுதல் வேண்டும். பயிற்சி வகுப்புகளுக்கு 80% வருகை தந்த தனித்தேர்வர்கள் மட்டுமே 2025-2026 ஆம் கல்வி ஆண்டிற்கான பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விற்கான செய்முறை தேர்விற்கு அனுமதிக்கப்படுவர். செய்முறைப் பயிற்சி பெற்ற தேர்வர்கள் அந்தந்த மாவட்டக் கல்வி (இடைநிலை) அலுவலரை தொடர்பு கொண்டு செய்முறைத் தேர்வு நடைபெறும் நாட்கள் மற்றும் மைய விவரம் குறித்து அறிந்து கொள்ளலாம்.

கூடுதல் விவரங்களுக்கு சிவகங்கை, மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) அலுவலகத்தையோ அல்லது மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தை நேரிலோ அல்லது 04575240405 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம். மேலும், மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) அவர்களின் அலுவலக முகவரியை www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரியின் வாயிலாக அறிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.



# மானாமதுரையில் உங்களுடன் ஸ்டாலின் 26 ,27 வார்டுகளில் சிறப்பு முகாம்

## நகர் மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி, துணைத் தலைவர். பாலசுந்தரம் பங்கேற்பு

மானாமதுரை, செப். 11-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி வார்டு எண் 26 ,27 ஆகிய வார்டுப் பகுதிகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் எனும் சிறப்பு மக்கள் தொடர்பு முகாம் நேற்று நடைபெற்றது...

இம்முகாமில் சட்டமன்ற மானாமதுரை நகர்மன்றத் தலைவர் எஸ். மாரியப்பன் கென்னடி, திமுக நகர செயலாளர் பொன்னுச்சாமி, திமுக துணைச் செயலாளர், நகர்மன்றத் துணைத் தலைவர் பாலசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை உரிய தீர்வு காணும்படி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினர்.

இந்த சிறப்பு முகாமில் நகர்திமுக நிர்வாகிகள் மானாமதுரை தொகுதி ஐடி விங் ஜி. ஆர். பாலா, திமுக மூத்த முன்னோடி, நகர் இலக்கிய அணி மோகனசுந்தரம் , செல்வம் என்ற அழகர்சாமி, 18 வது வார்டு திமுக வட்டச் செயலாளர் ராஜேந்திரன் த.சிவசுப்பிரமணியன் , கவுன்சிலர் பாலாஜி, 20 வது வார்டு திமுக தர்மா மற்றும் அரசுத்துறை அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்...



# காட்பாடி, சேனூர் ஊராட்சியில் தமிழக அரசின் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பங்கேற்பு

வேலூர், செப்.11-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, சேனூர் ஊராட்சி, சமுதாயக் கூடம் வளாகத்தில், தமிழக அரசின் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம், ஊராட்சி மன்ற தலைவர் லதா மணி, கவுன்சிலர் பிரபு ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இம்முகாமில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி கலந்து கொண்டு பார்வையிட்டு, வகுப்பு சான்றிதழ் கோரி மனு அளித்த பயனாளிக்கு சான்றிதழை வழங்கினார். இதில் சிறப்பு கண்காணிப்பு மற்றும் பார்வையாளராக மாவட்ட ஊராட்சிகள் உதவி இயக்குனர் திருமால், வட்டாட்சியர் ஜெகதீசன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நந்த குமார், கனகராஜ், ஊராட்சி செயலாளர் நீலமேகம் ஆகியோர் கலந்து கொண்டு முகாமை பார்வையிட்டனர். இம்மாமில் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்து கொண்டனர். பதிவேற்றம் செய்து கொண்ட பொதுமக்களின் கோரிக்கைகளை தீர்வு காணும் விதத்தில் தகுதியுள்ள மனுதாரர்களுக்கு ஆவண ஆணைகளை வழங்கினர். இதில் வருவாய் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வேளாண்மை துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, மின்சாரத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வு துறை உள்ளிட்ட அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




■ மதுரை திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் நாகமலை புதுக்கோட்டை ஊராட்சிக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமை தாசில்தார் செந்தாமரை வள்ளி, வட்டார வளர்ச்சி அலுவலர் செந்தில் மணி, அழகு பாண்டி ஆகியோர் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தனர்.முகாமில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் விஜயன்,ஊராட்சி செயலாளர் கண்ணன், மற்றும் அனைத்து துறை அரசு அதிகாரிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.இந்தமுகாம் இரண்டு நாட்கள் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.




■ மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் மேலவளவு, பூதமங்கலம்,அட்டபட்டி, கொடுக்கம்பட்டி ஆகிய ஊராட்சிகளுக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமை தாசில்தார்கள் செந்தாமரை லயனல் ராஜ்குமார் வட்டார வளர்ச்சி அலுவலர் செல்லப்பாண்டியன் ஆகியோர் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தனர். முகாமில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அய்யனார், ஊராட்சி செயலாளர்கள் சுவேகம்,ரூபா பாண்டி செல்வம்,கனகராஜ் மற்றும் திமுக ஒன்றிய செயலாளர் ராஜராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஐஐடி பட்டப்படிப்பிற்கு தேர்வாகியுள்ள சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த அரசு பள்ளி மாணவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்



சிவகங்கை, செப்.11-

சிவகங்கை மாவட்டம், ஐஐடி பட்டப்படிப்பிற்கு தேர்வாகியுள்ள சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த அரசு பள்ளி மாணவர்கள், சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக்கல்வித்துறை மற்றும் உயர்கல்வித்துறைக்கென எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தி, மாணாக்கர்களின் நலன் காத்து வருகி றார்கள். குறிப்பாக, மாணாக்கர்கள் இடைநிற்றலின்றி உயர்கல்வியினை பெற வேண்டும் என்ற உயரிய நோக்கில், புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் போன்ற திட்டங்களையும் தமிழகம் முழுவதும் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அதனைத்தொடர்ந்து, உலகப் புகழ்பெற்ற ஐஐடி மெட்ராஸ் கல்வியை மாணாக்கர்கள் எளிதில் அணுகக்கூடியதாக மாற்றும் நோக்கில், "அனைவருக்கும் ஐஐடி மெட்ராஸ்" என்ற திட்டமும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டமானது, தமிழ்நாடு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு உயர்கல்வியில் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்திடவும், அவர்கள் ஐஐடி போன்ற முன்னணி கல்வி நிறுவனங்களில் பயில வழிவகுத்திடவும், திறமைசாலியான மாணவர்களை உருவாக்குவதை நோக்கமாகவும் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், JEE நுழைவு தேர்வுக்கு அரசு பள்ளி மாணவர்களும் தயாராகி ஐஐடியில் சேரும் நிலையில், JEE நுழைவு தேர்வு மூலம் வாய்ப்பு கிடைக்காத மாணவர்களுக்கு ஐஐடி மெட்ராஸ் வழங்கும் B.S.Degree -Data Science (தரவு அறிவியல்) மற்றும் Electronic Systems (மின்னணு அமைப்புகள்) போன்ற பட்டப் படிப்புகளின் வாயிலாக ஐஐடி மெட்ராஸில் சேர்ந்து பயில்வதற்கான வாய்ப்பினை இத்திட்டம் உருவாக்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், பதினொன்றாம் வகுப்பு முடித்து பன்னிரெண்டாம் வகுப்பிற்கு செல்லும் மாணாக்கர்களுக்கு, ஐஐடி மெட்ராஸ் மூலம் 4 வார கால பயிற்சி அளிக்கப்படும். அப்பயிற்சியினை தொடர்ந்து நடத்தப்படும் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணாக்கர்கள் ஐஐடி மெட்ராஸ் வழங்கும் 4 ஆண்டு கால இளங்கலை அறிவியல் (B.S Degree) பட்டப்படிப்பில் சேரும் வாய்ப்பினை பெறுவர். அதுமட்டுமன்றி, பன்னிரெண்டாம் வகுப்பு முடித்து, பிற கல்வி அமைப்புகளில் பயிலும் மாணாக்கர்களும் தங்கள் கல்லூரி படிப்புடன் IIT Madras வழங்கும் B.S. Degree படிப்பினை தொடரலாம்.

மேலும், பன்னிரெண்டாம் வகுப்பில் கணிதம் மற்றும் அறிவியலை அடிப்படைப் பாடமாகப் படிக்கும் மாணாக்கர்கள் மட்டுமின்றி, அனைத்து பாடப்பிரிவு மாணாக்கர்களும் நான்கு ஆண்டு கால B.S. Degree - Data Science (தரவு அறிவியல்) பட்டப் படிப்பைப் படித்து,

மதிப்பெண் அடிப்படையில் GATE தேர்வு மூலம் ஐஐடியில் முதுகலை பட்டப் படிப்புகள் தொடரும் வாய்ப்பினையும் பெறலாம். அதேபோல், கணிதம் மற்றும் அறிவியலை அடிப்படைப் பாடமாக கொண்டு படிக்கும் மாணாக்கர்கள் நான்கு ஆண்டு கால B.S. Degree - Electronic Systems (மின்னணு அமைப்புகள்) பட்டப் படிப்பினையும் பயிலலாம்.

அனைவருக்கும் ஐஐடி மெட்ராஸ் குறித்து, முன்னதாக சிவகங்கை மாவட்டத்தில் அரசுப் பள்ளி மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஐஐடி மெட்ராஸ் திட்ட ஒருங்கிணைப்பாளரை கொண்டு விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டு, அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் இத்திட்டமானது செயல்படுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, மாநில அளவில் நடைபெற்ற முதல் நிலைத்தேர்வின் வாயிலாக சுமார் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் தேர்தெடுக்கப்பட்டு, 8 மாவட்டங்களைச் சார்ந்த 29 மாணவ, மாணவியர்கள் இறுதி பட்டியலில் தேர்வாகியுள்ளனர். அதில், சிவகங்கை மாவட்ட இடைக்காட்டூர் அரசு மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் செல்வன் அஸ்வின், செல்வன் பாலமுருகானந்தம் மற்றும் திருப்புவனம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவன் செல்வன் சரண்ராஜ் என மொத்தம் 3 மாணவர்கள் தேர்வாகியுள்ளனர் என்பது பெருமைக்குரிய ஒன்றாகும்.

தங்களது கடின உழைப்பினைக்கொண்டு சிறந்த முறையில் பயின்று, ஐஐடி பட்டப்படிப்பிற்கு தேர்வாகியுள்ள சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த அரசு பள்ளி மாணவர்களுக்கும், அம்மாணவர்களை ஊக்கப்படுத்தி, சிறந்த வழிகாட்டுதல்களை கொடுத்த பள்ளி தலைமையாசிரியர் மற்றும் ஆசிரிய பெருமக்களுக்கும் என வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுபோன்று, தமிழக அரசின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்களை மாணாக்கர்கள் தங்களுக்கு பயனுள்ளதாக பயன்படுத்திக் கொண்டு, சிறந்த முறையில் உயர்கல்வியினை பயின்று, வாழ்வில் சிறந்து விளங்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.


இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) திரு.மாரிமுத்து, இடைக்காட் டூர் அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் திருப்புவனம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# வேலூரில், எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு சங்கத்தின் சார்பில் மற்றும் எய்ட்ஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாரத்தான் ஓட்டப்பந்தயம்

வேலூர், செப்.11

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு சங்கத்தின் சார்பில் எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்ற மாரத்தான் போட்டியை மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி (10.09.2025) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக அருகிலிருந்து கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாநகராட்சி சுஜிதா ஆனந்தகுமார், மாவட்ட சுகாதார அலுவலர் மரு. பரணிதரன். மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலுவலக மண்டல திட்ட மேலாளர் கோ.கீர்த்திகா, மாமன்ற உறுப்பினர் சக்கரவர்த்தி, மாவட்ட விளையாட்டு அலுவலர் சுப்பிரமணியன் துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் ஓட்டப்பந்தய வீரர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# அதிமுகவை ஒருங்கிணைக்கும் செங்கோட்டையனின் முயற்சி நிச்சயம் வெற்றி பெறும்: ஓபிஎஸ் கருத்து

பெரியகுளம் / சென்னை, செப்.11-

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தேனி மாவட்டம் பெரியகுளத்தில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: அதிமுக ஒருங்கிணைந்தால்தான் வெற்றிபெற முடியும். இதற்கான முயற்சியை தற்போது செங்கோட்டையன் முன்னெடுத்துள்ளார். அவரது முயற்சி நிச்சயம் வெற்றிபெறும்.

குடியரசு துணைத் தலைவராக பொறுப்பேற்க உள்ள சி.பி.ராதாகிருஷ்ணன் நல்லவர். இவரை ஆதரித்து அனைத்திந்திய அண்ணா திராவிடக் கழக ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினரான தர்மர் எம்.பி. வாக்களித்துள்ளார். இவ்வாறு ஓ.பன்னீர்செல்வம் கூறினார்.

கட்சியின் கட்டுப்பாட்டை மீறக்கூடாது... அதிமுக எம்.பி. தம்பிதுரை டெல்லியில் செய்தியாளர்களிடம் கூறும்போது, "நாடாளுமன்ற வளாகத்தில் அமித்ஷாவை நான் சந்தித்தேன். செங்கோட்டையனை அழைத்துப் பேசியதாக அமித்ஷா என்னிடம் கூறவில்லை. எந்த கட்சியாக இருந்தாலும், அதற்கு கட்டுப்பட்டுத்தான் உறுப்பினர்கள் செயல்பட வேண்டும்" என்றார்.

# சென்னையில் 2வது நாளாக போராட்டத்தில் ஈடுபட்ட தூய்மை பணியாளர்கள் கைது

சென்னை, செப்.11-

சென்னையில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 2வது நாளாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட தூய்மைப் பணியாளர்களை போலீஸார் கைது செய்தனர். சென்னையில் ராயபுரம், திரு.வி.க.நகர் மண்டலங்களில் தூய்மைப் பணியை, தனியார் நிறுவனத்திடம் மாநகராட்சி ஒப்படைத்துள்ளதை கண்டித்தும், தங்களை பணி நிரந்தரம் செய்யக்கோரியும், தூய்மைப் பணியாளர்கள் ரிப்பன் மாளிகை முன்பு கடந்த ஆக.1ம் தேதிமுதல் தொடர்ந்து 13 நாட்கள் போராட்டம் நடத்தினர்.

நீதிமன்ற உத்தரவால், நள்ளிரவில் இவர்கள் கைது செய்து, குண்டுக்கட்டாக அப்புறப்படுத்தப்பட்டனர். அதைத்தொடர்ந்து செப். 4ம் தேதி சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள மேதின பூங்காவில், திடீரென திரண்ட 300க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்களை மீண்டும் குண்டுக்கட்டாக போலீஸ் கைது செய்தது. இந்த திடீர் போராட்டத்தை அடுத்து தூய்மைப் பணியாளர்களின் நடவடிக்கைகளை போலீசார் கண்காணித்து வந்தனர்.

இந்நிலையில் கொருக்குப்பேட்டை அம்பேத்கர் நகரில், தூய்மைப் பணியாளர்கள் 13 பேர் நேற்று முன்தினம் பணி நிரந்தரம் கோரி தங்கள் வீட்டருகில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுக்கு ஆதரவாக 200க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்களும் திரண்டனர். இத்தகவல் அறிந்து வந்த போலீஸார் அவர்களை உடனடியாக கைது செய்து அப்புறப்படுத்தியது. அவர்கள் நள்ளிரவு 1 மணியளவில் விடுவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இதையடுத்து சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் பின்புறம் (மாநகராட்சிக்கு அருகே) 2வது நாளாக அதே 13 தூய்மைப் பணியாளர்கள் மீண்டும் உண்ணாவிரத போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர். அங்கு வந்த போலீஸார் தூய்மைப் பணியாளர்களை தொடர்ந்து போராட விடாமல் குண்டுக்கட்டாக கைது செய்தனர். இது தொடர்பாக செய்தி யாளர்களிடம் தூய்மை பணியாளர்கள் கூறுகையில், "அமைச்சர் சேகர் பாபு மற்றும் மேயர் பிரியாவுடன் சேர்ந்து முதல்வருக்கு நன்றி தெரிவித்தவர்கள் தூய்மைப் பணியாளர்கள் அல்ல. அவர்கள் கட்சிக்காரர்கள்.

அதனால் தான் பதாகையை மறைத்து வைத்துக் கொண்டே பேசினர். நாங்கள் 2 மாதமாக வேலையில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறோம். வீட்டு வாடகை கூட கொடுக்க முடியவில்லை. முதல்வர் எங்களை சந்தித்து இந்த பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்" என்று தெரிவித்தனர்.

# தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் மண்டல அலுவலகத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

### சட்டமன்ற உறுப்பினர், மண்டல குழுத் தலைவர்கள் கலந்து கொண்டு கர்பினிகளுக்கு ஊட்ட சத்து பெட்டகங்களை வழங்கினர்





பல்லாவரம், செப்.11-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் 2வது மண்டல அலுவலகத்தில் 27 மற்றும் 28வது வார்டு மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. முகாமில் பல்லாவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மேயர் வஸந்தகுமாரி, துனை மேயர் காமராஜ், மண்டல குழுத் தலைவர் ஜோசப் அண்ணாதுரை, மாமன்ற உறுப்பினர் மகேஷ்வரி கார்த்துகேயன், கலந்துகொண்டு முகாமை ஆய்வு செய்து கர்பிணி பெண்களுக்கு ஊட்ட சத்து பெட்டகம் மற்றும் முகாமில் விண்ணபித்தவர்களுக்கு பிறப்பு, இறப்பு, சொத்துவரி, மின்சார அட்டை பெயர்மாற்றம் உள்ளிட்ட சான்றிதழ்களை வழங்கினார். உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மருத்துவதுறை, சுகாதாரதுறை, வருவாய் துறை, இசேவை மையம், மகளிர் உரிமை திட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பொதுமக்கள் தங்களது விண்ணப்பங்களை பூர்த்தி செய்து துறை அதிகாரிகளிடம் வழங்கினர். முகாமில் உதவி ஆணையாளர், சொர்ணலதா, பொறியாளர் சங்கர், சுகாதார துறை அலுவலர் சிவக்குமார், உதவி வருவாய்துறை அலுவலர் சுரேஷ் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் 2வது மண்டலம் 9வது வார்டு மற்றும் 13வது வார்டு சார்பில் பகுதி மக்களுக்கான

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் கர்பிணி பெண்களுக்கு ஊட்ட சத்து பெட்டகமும், பிறப்பு, இறப்பு சான்றிதழ்ளையும் வழங்கினார் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி





பல்லாவரம், செப்.11-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் 2வது மண்டலம் 9வது மற்றும் 13வது வார்டு சார்பில் பகுதி மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் பல்லாவரம் தனியார் பள்ளியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி துனை மேயர் கோ. காமராஜ், 2வது மண்டல குழுத் தலைவர் ஜோசப் அண்ணாதுரை, 9வது வார்டு மாமன்ற உறுப்பினர் லதா சிவகுமார், 13வது மாமன்ற உறுப்பினர் ரேணுகாதேவி பரமசிவம் ஆகியோர் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி நிகழ்ச்சியை துவக்கி வைத்து கர்பிணி பெண்களுக்கு ஊட்ட சத்து பெட்டகத்தை வழங்கி முகாமை ஆய்வு செய்து விண்ணப்பித்தவர்களுக்கு பிறப்பு, இறப்பு சான்றிதழ், சொத்துவரி, மின்சார பெயர்மாற்ற சான்றிதழ்களை சட்டமன்ற உறுப்பினர் வழங்கினார். இதில் உதவி ஆணையாளர் சொர் ணலதா, வட்டச் செயலாளர்கள் பரமசிவம், சிவகுமார் பணி மேற்பார்வையாளர் சுகாதாரதுறை அலுவலர் மற்றும் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# கோவை மாவட்டம், காரமடை.ஆர்.வி.கல்லூரி மாணவன் குத்துச்சண்டைப் போட்டியில் சாதனை



கோவை செப்.11-

முதலமைச்சர் கோப்பைக்கு மண்டல அளவிலான பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் சேலத்தில் கடந்த வாரம் தொடங்கி நடைபெற்றது. இங்கு நடைபெற்ற குத்துச்சண்டைப் போட்டியில் காரமடை, டாக்டர். ஆர்.வி.கலை அறிவியல் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு முதுநிலை வணிகவியல் துறையில் பயிலும் மாணவன் பி.கே.கவின் பங்கேற்றார். கோவை மாவட்டத்தின் பல்வேறு கல்லூரிகளில் இருந்து 30க்கும் மேற்பட்ட குத்துச்சண்டை வீரர்கள் கலந்து கொண்ட 71 75 கிலோ எடைப்பிரிவிலான இப்போட்டியில் இம்மாணவன் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்தார். இதனை அடுத்து மண்டல அளவில் இருந்து மாநில அளவிற்கு விளையாட தேர்ச்சி செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது, வெற்றி பெற்ற இம்மாணவரை கல்லூரி முதல்வர் முனைவர் சி. என்.ரூபா, நிர்வாக மேலாளர் மனோகரன் மற்றும் பேராசிரியர்கள் அனைவரும் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.



■ கோவை மாவட்டம் காரமடை ஊராட்சி ஒன்றியம் காளம்பாளையம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் 09.09.2025 அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்த புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது பெற்ற கோவை கார்மேல் கார்டன் பள்ளி முதல்வருக்கு பாராட்டு விழா



கோவை, செப்.11-

பள்ளி கல்வித்துறை சார்பில் சென்னை நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் நடைபெற்ற நல்லாசிரியர்களுக்கு விருதுகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்ட கோவை கார்மல் கார்டன் மேல்நிலை பள்ளி முதல்வர் ஆரோக்கிய ததேயூஸ் அவர்களுக்கு டாக்டர் ராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருதை தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்....

அதனைத்தொடர்ந்து விருதுபெற்ற கார்மல் கார்டன் பள்ளி முதல்வர் ஆரோக்கிய ததேயூஸ் அவர்களுக்கு பள்ளியின் நிர்வாகம் சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது....

கோவை புலியகுளம் பகுதியில் இயங்கி வரும் கார்மல் கார்டன் பதின்ம மேல்நிலை பள்ளியின் முதல்வர் மற்றும் தாளாளர் முனைவர் அருட்தந்தை ஆரோக்கிய ததேயூஸ் அவர்களுக்கு நல்லாசிரியர் விருது பெற்றதை கொண்டாடும் வகையில் பாராட்டு விழா பள்ளியின் கூட்டரங்கில் நடைபெற்றது

இது குறித்து பள்ளியின் முதல்வர் ததேயூஸ் கூறியதாவது டாக்டர் ராதாகிருஷ்ணன் விருதை பெற்றது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது... கல்வி துறைக்கும் கல்வி பணிக்கும் நான் ஆற்றிய பணி மிக மிக நன்று என்று உணர்கிறேன் இது ஒரு அடையாளம் இந்த அடையாளத்தை மேலும் வழுப்படுத்த அனேக பணிகளை மாணவர் சமுதாயத்திற்கு செய்ய விரும்புகிறேன் என்றார். மேலும் எனக்கு விருது வழங்கிய தமிழக அரசு துணை முதல்வருக்கும் பள்ளிக்கல்வித்துறைக்கும் இத்தருணத்தில் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். என்னை பரிந்துரை செய்த மாவட்ட பள்ளி கல்வி துறைக்கு கார்மல் கார்டன் பள்ளி நிர்வாகம் சார்பாகவும் எனது சார்பாகவும் நன்றிகளை உரித்தாக்குகிறேன். என்னை வழிநடத்திய மேதகு ஆயர்கள் குருக்கள், முன்னாள் மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்களும் என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார்..

இந்நிகழ்ச்சியின் முதன்மை விருந்தினர்களாக மறை மாவட்ட மேதகு ஆயர் தாமஸ் அக்குவினாஸ், முதன்மை குரு பேரருட் ஜான் ஜோசப் தானிஸ் அடிகளார் மற்றும் சிறப்பு விருந்தினராக புனிதா அந்தோனியம்மாள், ஒய்வு பெற்ற ஆசிரியர் ஜோ.தன்ராஜ், முன்னாள் மாணவர்கள் சங்க தலைவர் நந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புறையாற்றி சால்வை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்தனர்

நிகழ்ச்சியில் மாணவர்கள் ஆசிரியர்கள், உட்பட பலர் கலந்து கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தனர்



■ மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண்.21 தத்தனேரி களத்துப்பொட்டல் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாயக்கூடத்தை மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள் அருகில் ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், இ.ஆ.ப., அவர்கள், மாமன்ற உறுப்பினர் திரு.கஜேந்திரகுமார் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## தவில் நாதஸ்வரப் பயிற்சிப்பள்ளியில், நடப்புக் கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது

இராமேசுவரம், செப்.11-

இராமேசுவரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலால் தொடங்கி நடத்தப்படவுள்ள தவில் நாதஸ்வரப் பயிற்சிப்பள்ளியில், நடப்புக் கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. தவில், நாதஸ்வரப்பள்ளியில் 3 ஆண்டுகள் பயிற்சி வழங்கப்படும். இப்பயிற்சிப்பள்ளியில் சேர, எட்டாம் வகுப்புத் தேர்ச்சி என்கிற கல்வித் தகுதிக் கொண்ட இந்து மதத்தைப் பின்பற்றுபவர்கள் தகுதியுடையோர் ஆவார். 13 வயது முதல் 20 வயது வரையுடையோர் இப்பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். ஆண், பெண் ஆகிய இருபாலரும் இப்பயிற்சிப்பள்ளியில் சேர விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சிப்பள்ளியில் சேர்ந்து பயிற்சிப் பெறும் மாணவர்களுக்கு, விதிகளுக்குட்பட்டு, மாதந்தோறும் ரூ.10,000ஃ- (ரூபாய் பத்தாயிரம் மட்டும் ) ஊக்கத் தொகையாக வழங்கப்படும். மேலும், பயிற்சிக்காலத்தில், தங்கும் இடம், உணவு, உடை, பாடப்புத்தகங்கள், குறிப்பேடுகள் மற்றும் மருத்துவ வசதி ஆகியவை கட்டணமின்றி வழங்கப்படும். இப்பயிற்ச்சிப் பள்ளியில் சேர்ந்து தவில், நாதஸ்வர இசை கற்க விரும்பமுடையோர் இத்திருக்கோயில் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம். திருக்கோயில் மின்னஞ்சல் முகவரி: jceorameshwaram_35671.hrce@tn.gov.in இணைஆணையர்ஃ- செயல்அலுவலர் அவர்கள் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# பொய்கை மாட்டு சந்தையில் ரூ.90 லட்சத்துக்கு கால்நடைகள் விற்பனை

வேலூர், செப்.11-

வேலூர் அடுத்த பொய்கையில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் மாட்டுச்சந்தை நடைபெறுகிறது. இந்த சந்தைக்கு வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணா மலை மட்டுமின்றி தமிழகத்தின் பிற மாவட்டங்களில் இருந்தும், அண்டை மாநிலங்களில் இருந்தும் விற்பனைக்காக மாடுகள், ஆடுகள், கோழிகள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன.

சாதாரணமாக இங்கு விற்பனை என்பது ரூ.70 லட்சம் முதல் ரூ.1 கோடி வரை அப்போதைய சூழலுக்கு ஏற்ப நடைபெறும்.கடந்த வாரங்களில் குறைந்த அளவிலேயே கால்நடைகள் வந்ததால் விற்பனையும் ரூ.60 முதல் 70 லட்சம் வரையே இருந்தது. இந்நிலையில் நேற்று நடந்த சந்தைக்கு 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடுகள், ஆடுகள், கோழிகள் என கால்நடைகள் குவிந்து சந்தை களைக்கட்டியது. வியாபாரிகளும் மாடுகளை ஆர்வத்துடன் வாங்கி சென்றனர். இதனால் விற்பனையும் இன்று கால்நடைகள் உட்பட பிற கால்நடைகளுக்கு தேவைப்படும் பொருட்கள் என அனைத்தும் சேர்ந்து வர்த்தகம் ரூ.90 லட்சம் வரை நடந்ததாக வியாபாரிகள் தெரிவித்தனர். இதுகுறித்து வியாபாரிகள் கூறுகையில், ‘தற்போது அடிக்கடி மழை பெய்து வருவதால் தீவனம் தட்டுப்பாடு இல்லை. இதனால் மாடுகள் வரத்து நேற்று 1200க்கும் மேற்பட்ட அதிகளவில் உள்ளது. தற்போது கறவை மாடுகள், ஜெர்சி கலப்பின பசுக்கள், காளைகள், உழவு மாடுகள், சந்தைக்கு வந்தது. இவைகளின் விலை சற்று அதிகமாக உள்ளது. இதனால் விற்பனையும் ரூ.90 லட்சம் வரை நடந்தது. விவசாயிகளும், கால்நடை வியாபாரிகளும் மாடுகளை வாங்க ஆர்வம் காட்டி வருகின்றனர். விவசாயிகளும் தங்களுக்கு ஏற்ற விலை கிடைப்பதால் மாடுகளை விற்பனை செய்தனர்’ என்றனர்.



### குரோம்பேட்டை அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில்

# ஆசிரியர் தின விழா பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் முன்னாள் மாணவர் பேரவை சார்பில் சிறப்பாக நடைபெற்றது

பல்லாவரம், செப்.11-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டை அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர் தின விழா பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் முன்னாள் மாணவர் பேரவை சார்பில் சிறப்பாக நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, 2வது மண்டலக் குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி ஆசிரியர்களுக்கு சால்வை அணிவித்து விருதுகள் வழங்கி பாராட்டினார்கள் அதனைத் தொடர்ந்து ஆசிரியர்களுக்கு பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கினர் இந்த நிகழ்ச்சியில் பள்ளியின் தலைமை ஆசிரியர் முகமது கலில், உதவி தலைமை ஆசிரியர் டோமினிக், பகுதி செயலாளர் இ.எஸ். பெர்னாட், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் த.ராஜாராமன், துணைத் தலைவர் முஜிபுர் ரஹ்மான், பொருளாளர் உஷா, நிர்வாகிகள் எம்.ஐ.டி விஜய், ஜே.சந்திரசேகரன், நடராஜன், பரமதயாளன் மற்றும் ஆசிரியர்கள் பள்ளி மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

# கே.எம்.சி.ஹெச்மருத்துவ கல்லூரி சார்பில் தடாகத்தில் ஊரக மருத்துவ மையம் திறப்பு விழா





கோவை, செப்.11-

கோவை தடாகம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிவாழ் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கேஎம்சிஹெச் மருத்துவ கல்லூரி சார்பாக ஊரக மருத்துவ மையக் கட்டிடத்தின் திறப்பு விழா செப்டம்பர் 10ம் தேதி புதன்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்றது.

இப்புதிய ஊரக மருத்துவ மையக் கட்டிடத்தை மேனாள் அமைச்சர் மற்றும் கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி அவர்கள் திறந்து வைத்தார். கேஎம்சிஹெச் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் நல்லா ஜி பழனிசாமி, துணைத் தலைவர் டாக்டர் தவமணி தேவி பழனிசாமி மற்றும் செயல் இயக்குனர் டாக்டர் அருண் பழனிசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் ஊர் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

இப்புதிய ஊரக மையத்தில் புறநோயாளிகள் மருத்துவர் ஆலோசனை பெறுவதற்கான கட்டணம் ரூபாய் 30 மட்டுமே செலுத்தி ஒரு வருடம் முழுவதும் எத்தனை முறை வேண்டுமானாலும் நோயாளிகள் மருத்துவர்களின் ஆலோசனை பெற்றுக்கொள்ளலாம்.

இம்மையத்தில் இரத்தப் பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை, இரத்தத்தில் உப்பின் அளவு, கிரியாடினின், இரத்ததில் சர்க்கரை அளவு, பாப் ஸ்மியர் பரிசோதனை, இரத்த வகை, மலேரியா பாரசைட், மார்பு எக்ஸ்ரே, இசிஜி போன்ற அனைத்து பரிசோதனைகளும் இலவசம்.

மருத்துவர்கள் பரிந்துரைக்கும் நபர்களுக்கு மூன்று நாட்களுக்கான மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கப்படும்.

திறப்புவிழாவில் உரையாற்றிய கேஎம்சிஹெச் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் நல்லா ஜி பழனிசாமி, “கிராமப்புற ஏழை எளிய மக்களின் நலன் காப்பதற்காக உருவாக்கப்பட்ட கேஎம்சிஹெச் மருத்துவ கல்லூரி ஊரக மருத்துவ மையத்தினை பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161